www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

# முதல் திருப்புதல் தேர்வு - 2023

## தமிழ்

வகுப்பு - 10
காலம் : 3.00 மணி
மதிப்பெண்கள் : 100

அ. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 15 x 1 = 15

1. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது.
   அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
   இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்
2. " மருந்தே ஆயினும் விருந்தோடு உண் " என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல் ..............
   அ) குறுந்தொகை ஆ) கொன்றை வேந்தன் இ) திருக்குறள் ஈ) நற்றிணை
3. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்
   அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
4. சிவப்புச் சட்டை பேசினார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?
   அ) பண்புத்தொகை ஆ) அன்மொழித்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை
5. காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள் - இத்தொடரில் அடிக்கோடிட்டப் பகுதி குறிப்பிடுவது
   அ) இலையும், சருகும் ஆ) தோகையும், சண்டும் இ) தாளும், ஓலையும் ஈ) சருகும், சண்டும்
6. பெண் குழந்தையை 'வாடா செல்லம்' என்று கொஞ்சுவது
   அ) பால் வழுவமைதி ஆ) திணை வழுவமைதி இ) மரபு வழுவமைதி ஈ) கால வழுவமைதி
7. 'செல்வத்துப் பயனே ஈதல்' - என்று கூறியவர்
   அ) கபிலர் ஆ) ஔவையார் இ) நக்கீரனார் ஈ) மாங்குடி மருதனார்
8. அழியாத கல் இலக்கியம் எனப் போற்றப்படுவது
   அ) செப்பேடு ஆ) ஓவியம் இ) சிற்பங்கள் ஈ) மெய்க்கீர்த்தி
9. செய்குத் தம்பிப்பாவலர் ......... என அழைக்கப்படுகிறார்.
   அ) நாஞ்சில் கவிஞர் ஆ) மக்கள் கவிஞர் இ) சதாவதானி ஈ) தசாவதானி
10. இலக்கண முறையுடன் பிழையின்றி பேசுவதும் எழுதுவதும் ......... ஆகும்.
    அ) வழு ஆ) வழாநிலை இ) வழுவமைதி ஈ) இயல்பு வழக்கு
11. உலக காற்று நாளாகக் கொண்டாடப்படும் தினம்
    அ) ஜூன் 5 ஆ) ஜூன் இ) ஜூன் 15 ஈ) ஜூலை 15

பாடலைப் படித்து வினாவிற்கு விடையளி

பகர்வனர் திரிதரு நகர வீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்

12. இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?
    அ) மெய்க்கீர்த்தி ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) பரிபாடல்
13. பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக?
    அ) பகர்வனர், பட்டினும் ஆ) மயிரினும், திரிதரு இ) தூசும் இருக்கையும் ஈ) வீதியும், அகிலும்
14. காருகர் பொருள் தருக.
    அ) மரத்தச்சர் ஆ) இரும்புக் கொல்லர் இ) உப்பு விற்பவர் ஈ) நெசவாளர்
15. இப்பாடலின் ஆசிரியர் யார்?
    அ) நக்கீரனார் ஆ) நப்பூதனார் இ) சீத்தலைச் சாத்தனார் ஈ) இளங்கோவடிகள்



CamScanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

**ஆ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி. வினா எண்.21 கட்டாய வினா** 4 x 2 = 8

16. விடைக்கேற்ற வினா அமைக்க.

அ) தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக் கூறுகளைக் கொண்டுள்ளது.

ஆ) ஒயிலாட்டத்தில் கோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தபடுகின்றன.

17. 'காடுகள் தினம்' விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

18. தமிழ்ச்சொல் வளம் குறித்துக் கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.

19. '*காய்மணியாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்*' – உவமை உணர்த்தும் கருத்து யாது?

20. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு சார்ந்த கண்டுபிடிப்புகள் இரண்டனை எழுதுக?

21. 'வினை' – என முடியும் திருக்குறளை எழுதுக.

**இ. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5 x 2 = 10

22. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகள் அட்டவணைப் படுத்துக.

23. '*வேங்கை*' என்பதைத் தொடர் மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்துக.

24. குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக. குறிப்பு : எதிர்மறையான சொற்களை எழுதுக. அ) அருகில் அமர்க ஆ) மீளாத் துயர்

25. கலைச்சொல் தருக. அ) Homograph ஆ) Vowel

26. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக. அ) தொடு – தோடு ஆ) மலை – மாலை

27. தணிந்தது – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

28. தீவக அணியின் வகைகளை எழுதுக?

**ஈ. எவையேனும் இரண்டினுக்கு விடையளி.** 2 x 3 = 6

29. '*நீர் தன்னைப் பற்றி பேசினால் ......*' உங்கள் கற்பனையில் ஆறு தலைப்புகள் தருக?

30. இக்காலம் மொழிபெயர்ப்பு காலம். காலையில் எழுந்தவுடன் நாளிதழ் படிப்பு, மொழிபெயர்ப்பு மூலமே நமக்குச் சாத்தியமாகிறது. இரவு தொலைக்காட்சியல் காணும், கேட்கும் செய்திகளும் மொழிபெயர்ப்பு மூலமே கிடைக்கின்றன. இடையில் நம் பணிகள் பலவற்றிலும் மொழிபெயர்ப்பின் துணை இருந்து கொண்டே இருக்கிறது. ஜெர்மனியில் ஓர் ஆண்டில் பிற மொழிகளிலிருந்து 5000 நூல்கள் வரை மொழி பெயர்க்கப்படுகின்றன.

அ) எந்த நாட்டில் ஓர் ஆண்டில் பிற மொழிகளிலிருந்து 5000 நூல்கள் வரை மொழிபெயர்க்கப்படுகின்றன?

ஆ) காலையில் எழுந்தவுடன் ....... படிப்பு மொழிபெயர்ப்பு மூலமே நமக்குச் சாத்தியமாகிறது.

இ) மொழி பெயர்ப்பின் பயன்குறித்து ஏதேனும் ஒரு நன்மையான செய்தியைக் கூறு?

31. '*சுற்றுப்புறச் சூழலை பேணுவதே இன்றைய அறம்*', என்ற தலைப்பில், பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு ஒன்றை உருவாக்குக. (குறிப்பு : சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கச் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தாலும், ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஏற்படும் மாற்றமே சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும்.)

**உ. எவையேனும் இரண்டினுக்கு விடையளி. வினா எண்.34 கட்டாய வினா.** 2 x 3 = 6

32. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

33. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவி பாடுகிறார்?

34. 'தண்டலை' – எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல் (அல்லது)

'மாற்றம்' – எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடல்

**ஊ. எவையேனும் இரண்டினுக்கு விடையளி.** 2 x 3 = 6

35. கொடை வினா, ஏவல் வினா இரண்டினையும் சான்றுடன் விளக்கம் தருக?

36. "ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை ; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி" குறட்பாவை அலகிடுக.

37. நிரல்நிறை அணியை சான்றுடன் விளக்குக?



CamScanner

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

**எ. பின்வரும் வினாவிற்கு விடையளி.** **5 x 5 = 25**

38. அ. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக. **(அல்லது)** ஆ. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

39. அ. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்கு கடிதம் எழுதுக. **(அல்லது)**

ஆ. உங்கள் பகுதியில் ஏற்பட்ட கடும்புயலில் சாய்ந்துவிட்ட மரங்களை அகற்றியும், பழுதடைந்த சாலைகளைச் சீரமைத்தும், பழுதடைந்த மின்கம்பங்களைச் சரி செய்தும் தருமாறு மாநகராட்சி ஆணையருக்கு கடிதம் ஒன்று எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்துக்கள் ஐந்தினை எழுதுக.



41. மதுரை மாவட்டம் பாரதி தெருவில் வசிக்கும் கலையரசன் என்பவரது மகன் செழியனுக்கு, மதுரை மாவட்ட மைய நூலகத்தில் உறுப்பினராக சேருவதற்கு நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்பி உதவி செய்க.

---

**நூலக உறுப்பினர் படிவம்**

**திருப்பத்தூர் மாவட்ட நூலக ஆணைக்குழு**

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ....திருப்பத்தூர்........................

உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண் 1341 உறுப்பினர் எண் 5143

1. பெயர் : 10131
2. தந்தை பெயர் : சோமு
3. பிறந்த நாள் : 08/10/2008
4. வயது : 15
5. படிப்பு : 10th வகுப்பு
6. தொலைபேசி எண் : 9659808810
7. முகவரி : அகதிகாண்டப்பட்டி.

(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

நான் 10131 நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. ..200.... சந்தா தொகை ரூ. ...50........... ஆக மொத்தம் ரூ. ..250.......... பணமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் : தங்கள் உண்மையுள்ள

திரு / திருமதி / செல்வி / செல்வன் ..........அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)



CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

42. அ. மொழி பெயர்க்க.

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature. The Marutam region was fit for cultivation, as it had the fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered Indispensable by the ancient Tamils. (அல்லது) ஆ. இன்சொல் பேசுவதால் ஏற்படும் நன்மைகளைப் பட்டியலிடுக.

**ஏ. பின்வரும் வினாவிற்கு விடையளி.** **3 x 8 = 24**

43. அ. கருணையின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க (அல்லது)

ஆ. கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், தப்பு ஆட்டம் ஆகிய நான்கு வகை நிகழ்கலைகளையும் விளக்குக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. (அல்லது)

ஆ) அழகிரிசாமியின் ஒருவன் இருக்கிறான் சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

ஆ) முன்னுரை – விசும்பின் துளியும் பசும்புல் தலையும் – காற்று மாசு – பசுமையைக் காப்போம் – மரம் நமக்கு வரம் – மழை நீர் உயிர் நீர் – முடிவுரை. இக்குறிப்புகளைப் பயன்படுத்தி இயற்கையைக் காப்போம் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

---



CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com